# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 16<br>Defence<br>Court |
| Name | : | திரு.செந்தாமரைக்கண்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of March 2026.

**(Accused absent. Petition filed and allowed. )**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது திருநெல்வேலி மாநகர காவல் உதவி ஆணையராக மாநகர குற்றப்பிரிவில் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 06.03.2016ம் தேதி ஊத்துமலை காவல் நிலைய ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது, ஊத்துமலை காவல் நிலைய குற்ற எண். 56/2016, சட்டப்பிரிவுகள் 294(b), 307 IPC மற்றும் 3 of Arms Act என்ற வழக்கில் ஊத்துமலை பெண் சார்பு ஆய்வாளர்

திருமதி. சாந்தி என்பவர் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை நகலை நான் பெற்றுக்கொண்டு விசாரணையை தொடங்கினேன்.

2) கடந்த 06.03.2016 ம் தேதி காலை 06.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான தட்டப்பாறை கணபதி என்பவரது தென்னந்தோப்பு சென்று சாட்சிகள் ஜெயபால், சாமியாத்தேவர் ஆகியோரின் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 9 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 10** ஆகும். சம்பவ இடத்தில் துப்பாக்கி தோட்டாக்களின் காலி கேஸ்கள் 3 எண்ணம் தனித்தனியாக காணப்பட்டது. அதை அத்தாட்சி மூலம் 06.03.2016 அன்று 06.45 மணிக்கு அதே சாட்சிகளின் முன்பு கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 11** ஆகும். **துப்பாக்கி தோட்டாக்களின் காலி கேஸ்கள் சா.பொ.1** ஆகும். பின்னர் எதிரி நல்லமலையை 06.03.2016 அன்று 14.30 மணிக்கு திருநெல்வேலி ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு அருகில் வைத்து சாட்சிகள் காளிசாமி, பரமசிவம் ஆகியோர் முன்பு கைது செய்து விசாரிக்க எதிரி நல்லமலை தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் தற்போது கையில் வைத்திருக்கும் கைப்பையில் 2 ரிவால்வர் தோட்டாக்களும், தெய்வம் என்பவர் அவரிடம் கொடுத்த 10 காசோலைகளையும் வைத்துள்ளதை ஆஜர் செய்கிறேன் என்று சொன்னார். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 12** ஆகும். மேற்படி ரிவால்வர் தோட்டாக்கள் இரண்டை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 13** ஆகும். கைப்பற்றப்பட்ட அந்த **இரண்டு தோட்டாக்கள் சா.பொ.2** ஆகும்.

3) பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் தெய்வசுந்தரபாண்டியன், ஜெயபால், சாமியாத்தேவர், பெண் உதவி ஆய்வாளர் திருமதி. சாந்தி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கின் எதிரி நல்லமலையை தக்க வழிக்காவலுடன் கனம் குற்றவியல் நடுவர்

நீதிமன்றத்திற்கு அனுப்பி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 12.03.2016 அன்று 09.15 மணிக்கு அத்தாட்சி மூலம் திருநெல்வேலி டவுணிற்கு அருகில் உள்ள எதிரி மாரியப்பன் பராமரித்து வந்த தோட்டத்தின் வேலிக்கு அருகிலுள்ள சுமார் அரை அடி ஆழத்தில் ஒரு சருகை பையில் இருந்த கைத்துப்பாக்கியை எதிரி மாரியப்பன் அடையாளம் காட்ட சாட்சிகள் தர்மராஜ், திருமதி. மகாலெட்சுமி ஆகியோரின் முன்னிலையில் கைத்துப்பாக்கி ஒன்றையும், டேன்சிங் மேயர் என்று எழுதியிருந்த வாடாமல்லி கலர், புளூ, மஞ்சள் கலரில் உள்ள சருகை பையை கைப்பற்றினேன். பின்னர் 30.03.2016 ம் தேதி 11.00 மணிக்கு அத்தாட்சி மூலம் திருநெல்வேல் ஷிபா மருத்துவமனையில் வைத்து இவ்வழக்கில் காயம்பட்ட வெள்ளத்துரை என்பவரிடமிருந்து ஆபரேஷனின் போது அவரது உடலிலிருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கி குண்டை மருத்துவரிடம் விசாரணையின்போது மருத்துவர்கள் திரு. பால், கிஷான் கில்பர்ட் ஆகியோர் முன்னிலையில் துப்பாக்கி குண்டு ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 14** ஆகும். கைப்பற்றப்பட்ட அந்த **துப்பாக்கி குண்டு சா.பொ. 3** ஆகும். இவ்வழக்கின் சாட்சிகள் வெள்ளத்துரை த.பெ. மாடசாமித்தேவர், மாரியப்பன், கணேசன், கணபதிதேவர், சபரிசெல்வம், வெள்ளத்துரை த.பெ.சாமித்துரை, மாரியப்பன், ஸ்ரீரங்கம், சிவா என்ற சிதம்பரம், விஷ்ணு, காளிசாமி, பரமசிவன், டாக்டர்கள். திரு. ஸ்ரீதரன், பால், நல்லமுத்துசாமி, திரு. திருநாவுக்கரசு, தலைமை காவலர் திரு. தாசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கின் சொத்துக்களை படிவம் – 91 மூலம் நீதிமன்றம் அனுப்பினேன். அந்த **படிவம் –91 (4 எண்ணம்) அ.சா.ஆ. 15 வரிசை** ஆகும். கைப்பற்றப்பட்ட **துப்பாக்கி சா.பொ.4** ஆகும். **சருகைப்பை சா.பொ. 5** ஆகும்.

4) கடந்த 26.04.2016 ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்களை பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை பெறவேண்டி கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி அவர்கள் முன்பாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து

அனுப்பினேன். அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.16** ஆகும். அதன் அடிப்படையில் பெறப்பட்ட **தடய அறிவியல் துறை அறிக்கை அ.சா.ஆ. 17** ஆகும். 29.07.2016 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 307 IPC & 3 of Arms Act @ 294(b), 307 IPC, 25(1) (1A) of Arms Act என மாற்றியது சம்பந்தமாக கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கு சட்ட மாறுதல் அறிக்கையை அனுப்பினேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 18** ஆகும். பின்னர் என்னுடைய புலன்விசாரணையிலும், சாட்சிகளின் விசாரணையிலும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் கடந்த 29.07.2016 ம் தேதி எதிரி நல்லமலையின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 307 IPC & 3 of Arms Act @ 294(b), 307 IPC, 25(1) (1A) of Arms Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இவ்வழக்கில் சாட்சி தெய்வசுந்தரபாண்டியனுக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். மருதப்பப்புரத்திலிருந்து ஊத்துமலைக்கு அரைமணி நேரத்தில் வரமுடியும் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணம் குறித்து தெய்வசுந்தரபாண்டியன் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் 7 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் துப்பாக்கியை எதிரி நல்லமலை என்னிடம் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், சாட்சி வெள்ளத்துரைக்கு எதிரியால் எந்தவொரு காயமும் ஏற்படுத்தப்படவில்லை என்றும், இவ்வழக்கின் புகார், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரிவரைபடம், அத்தாட்சிகள், எதிரி கைது, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை என்னால் காவல் நிலையத்திலேயே வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும்

சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi